தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 19, புதன்கிழமை.

கார்த்திகை 4, அட்க்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்
பொருளும் அதனினூங்கு இல்''

சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை வழங்கவேண்டும், அத்தகைய சொல் வன்மையைவிடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இராமநாதபுரம், திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கிகள்

71—(*வினா எண் 2574) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கிகள் விவசாயிகளை சேனைக்கிழங்கு பயிரிட கட்டாயப் படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) மற்ற விவசாயப் பயிர்கள் பயிரிட கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம், திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கிகள் சேனைக்கிழங்கு பயிரிட விவசாயிகளை கட்டாயப் படுத்துவதில்லை.

(ஆ) விவசாயிகளுக்கு இதர பயிர்களுக்கான, தேவையான கடன்களை, இவ்வங்கிகள் அளித்து விடுகின்றன.